சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 123/2020

PW - 1

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | மகேஸ்வரி |
| க.பெ. (அ) த.பெ. | துரைசாமி |
| வயது | 63 |
| முகவரி | சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| 1.மசாஆ 1 - | 17.01.2019 தேதியிட்ட கோமங்கலம் காவல் நிலைய முதல் தகவல் அறிக்கையின் சான்று நகல் |
| 2.மசாஆ 2 - | 20.02.2019 தேதியிட்ட இறுதி அறிக்கை |
| 3.மசாஆ 3 - | 17.01.2019 தேதியிட்ட பார்வை மகஜர் |
| 4 மசாஆ 4 - | மாதிரி வரைபடம் |
| 5.மசாஆ 5 - | 17.01.2019 தேதியிட்ட TN 22 BW 6726 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்று நகல் |
| 6.மசாஆ 6 - | 25.01.2019 தேதியிட்ட காயச் சான்று |

| | |
|---|---|
| 7.மசாஆ 7 - | மருத்துவ பில்களின் தொகுப்பு ரூ33,387/- (எதிர்தரப்பினரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) |
| 8.மசாஆ 8 - | 25.01.2019 தேதியிட்ட ஆம்புலன்ஸ் பில் |
| 9.மசாஆ 9 - | 25.01.2019 தேதியிட்ட விடுவிப்பு சான்று |
| 10.மசாஆ 10- | எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 11.மசாஆ 11 - | எனது வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்கம் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 12.மசாஆ 12- | விபத்தில் சம்மந்தப்பட்ட பேருந்தின் காப்பீடு நகல் |

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பேருந்தில் பயணம் செய்யும் போது படிகட்டுக்கு முன்பு நின்று பயணம் செய்வது தவறு என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் பேருந்தில் கவனக்குறைவாக படிக்கட்டில் அருகில் நின்று கொண்டிருந்த காரணத்தினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பேருந்தில் ஓட்டுநருக்கு 2 சீட்டு தள்ளி உட்கார்ந்து போய்கொண்டிருந்தேன். பேருந்தில் நான் உட்கார்ந்து வந்த போது நடத்துனர் கோமங்கலம் வந்துவிட்டது என்று கூறிய காரணத்தினால் நான் எழுந்த போது நிலைதடுமாறு பேருந்தில் இருந்து வெளியே வந்து விழுந்துவிட்டேன். பேருந்தின் நடத்துனர் ஓடும் வண்டியில் அவ்வாறு கூறியிருக்கமாட்டார் என்றும், நான் தான் பேருந்து நிற்கும் முன்பாக இறங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தின் காரணமாக நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ

பில்கள் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. பேருந்தின் நடத்துனர் விசில் அடித்து அதன் பின் தான் நான் எழுந்திருக்க வேண்டும் என்றும், நானாகவே கவனக்குறைவாக பேருந்திற்குள் எழுந்த காரணத்தினல் தான் விபத்து எற்பட்டது என்றால் சரியல்ல. நான் தான் கவனக்குறைவாக பேருந்தில் எழுந்ததன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தொழிலை காட்டுவதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. ஆகவே 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி